

**<u>இந்திய மொழிகளிலேயே முதல் முறையாக</u>**
**<u>ப்ரெய்ல் வடிவில் ஒரு அகராதி</u>**
**<u>க்ரியா அகராதியின் ப்ரெய்ல் வடிவம்</u>**




# An Indian Language Dictionary in Braille Form for the First Time. An Initiative by Cre-A:

(The English text follows the Tamil text.)

***விரைவில்*** க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் புதிய பதிப்பு ப்ரெய்ல் வடிவில் வெளிவர உள்ளது. க்ரியா மேற்கொண்ட முன்முயற்சியின் காரணமாகவும் காக்னிஸன்ட் அறக்கட்டளை வழங்கிய மானியத்தின் உதவியாலும் க்ரியா அகராதியை ப்ரெய்ல் பதிப்புக்கு மாற்றும் பணியைப் பார்வையற்றோர் நலனுக்காக மதுரையில் இயங்கும் Indian Association for the Blind (IAB) என்ற தொண்டு நிறுவனம் ஏற்றுள்ளது.

***அகராதியின்*** ப்ரெய்ல் பதிப்புக்கான உரிமையை IAB அமைப்புக்கு க்ரியா இலவசமாகத் தந்திருக்கிறது. அகராதியின் உள்ளடக்கத்தை ப்ரெய்ல் வடிவில் மாற்றுவதற்கு வசதியாக, மின்னணுப் பிரதி ஒன்றையும் க்ரியா IAB நிறுவனத்துக்கு இலவசமாக வழங்கியுள்ளது. அகராதியியல், மொழி, மொழியியல் ஆகியவை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் நிறுவனங்கள், இந்த மின்னணுப் பிரதியைப் பெற ரூ.4.00 லட்சம் செலுத்துகின்றன.

***ப்ரெய்ல்*** பதிப்புக்கான ஆரம்பக் கட்ட வேலைகள் துவங்கிவிட்டன. ப்ரெய்ல் பதிப்பின் 40 பிரதிகளை உருவாக்கும் பணி 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2011 ஆம் ஆண்டின் துவக்கத்தில் முழுமையடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த 40 பிரதிகளைத் தயாரிக்க சுமார் ரூ. 11.00 லட்சம் செலவாகும். இந்தப் பிரதிகளைத் தயாரிக்க ஆகும் மொத்தச் செலவையும், பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னணி நிறுவனமான காக்னிஸன்ட் நிறுவனம் உருவாக்கியிருக்கும் காக்னிஸன்ட் அறக்கட்டளை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தியாவில் கல்வி மற்றும் உடல்நலம் சார்ந்த பல்வேறு திட்டங்களுக்கு காக்னிஸன்ட் அறக்கட்டளை ஏற்கனவே கணிசமாக ஆதரவளித்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

***பார்வையற்றோருக்காகத்*** தமிழ்நாட்டில் நடத்தப்படும் 20 பள்ளிகளுக்கும், பார்வையற்றோர் கணிசமாக இருக்கும் 20 நிறுவனங்களுக்கும் ப்ரெய்ல் வடிவிலான க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இலவசமாகத் தரப்படும்.

***க்ரியா*** அகராதியின் அச்சிட்ட ஒரு பக்கத்தை ப்ரெய்ல் வடிவில் மாற்றும்போது, அது 6 பக்கங்களாக ஆகும். இவ்வாறு அகராதியின் ப்ரெய்ல் பிரதி ஒவ்வொன்றும் சுமார் 8400 பக்கங்களில், 70 தொகுப்புகளாக வெளிவரும் என்று IAB நிறுவனத்தின் நிறுவனரும், அதன் செயலாளருமான திரு. ஜின்னா தெரிவிக்கிறார்.

***1992*** ஆம் ஆண்டு க்ரியா முதன்முதலாகத் தற்காலத் தமிழ் அகராதியை வெளியிட்டது. பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2008 ஆம் ஆண்டு, விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பை க்ரியா வெளியிட்டது. 75 லட்சம் தமிழ்ச் சொற்கள் கொண்ட சொல்வங்கியின் உதவியுடன், முற்றிலும் கணிப்பொறியைப் பயன்படுத்தி, இந்தப் புதிய பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 21,000 தலைச்சொற்கள், 38,000 எடுத்துக்காட்டு வாக்கியங்கள், 1700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள், 342 விளக்கப் படங்கள் தரப்பட்டுள்ளன என்பது அகராதியின் சிறப்பு அம்சம்.



## An Indian Language Dictionary in Braille Form for the First Time. An Initiative by Cre-A:

**The** Cre-A: Dictionary of Contemporary Tamil (Tamil-Tamil-English) 2008, will soon be available in Braille form. Initiated by Cre-A: and funded by Cognizant Foundation, the conversion of the Cre-A: dictionary to its Braille imprint has been undertaken by the Madurai-based Indian Association for the Blind (IAB), a not-for-profit organization in the service of the Visually Challenged.

**Cre-A:** has provided a free license to IAB. To enable the conversion, an editable electronic version of the dictionary, which is normally shared with institutions with interests in lexicography and allied fields at a price of Rs. 4 lakh, has been passed onto IAB, free of cost.

**The** initial activities for the Braille edition have begun. The entire project of producing 40 copies of the Braille version is expected to be completed by the end of 2010/ early 2011. The cost of producing these 40 copies will be approximately. Rs. 11 lakhs. This entire production cost is being funded by the Cognizant Foundation, the CSR arm of Cognizant, the global IT major. Cognizant Foundation has been supporting several projects in the areas of education and healthcare, across India.

**The** Braille edition of the Cre-A: Dictionary of Contemporary Tamil will be distributed free of cost to all the 20 schools for the visually handicapped in the State of Tamil Nadu and to 20 organisations that have persons visually challenged.

**"Each** page of the standard print dictionary will become 6 pages in the Braille edition. So the Braille dictionary will have about 8400 pages and will be published in 70 volumes", says Mr. Jinnah, Founder and Secretary General of IAB.

